முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1677

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**02.05.2024,** வியாழக்கிழமை

1. சக்திமிகு அரங்கனே வாழ்க வாழ்க
   சற்குருவாய் வாழுகின்ற தேசிகா வாழ்க
   பக்திகொண்டு சித்த நெறி தேடி உன்வழி
   பாருலகோர் தொடர்ந்து வணங்கி வர
2. வருவோர்க்கெல்லாம் ஞானசித்தி எளிதாகுமென
   வடிவேலன் யான் வரம் தந்து இனிதே
   குருவாக உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி
   (குரோதி வருடம் சித்திரை மாதம் 19 ம் நாள், 02.05.2024, வியாழக்கிழமை)
   குறைவின்றி சுப்ரமணியர் யானும் வழங்கிடுவேன்
3. திரு அருள் கொண்டு இந்த பேருலகை
   தெய்வ நெறி காட்டி காத்தருள
   குருவாக உன்னை ஆறுமுகன் யான்
   குவலயத்தில் தேர்வு செய்துள்ளேன்
4. உள்ளபடி அரங்கன் உன் மார்க்கத்தை
   உலகோர் ஏற்றுக்கொண்டு வந்தால் போதும்
   வல்லமை கூடி வருவோரெல்லாம்
   வையகத்தில் என் ஆசிபட ஞானிகளாகி
5. ஆகியே அரங்கன் நீ தேடுகின்ற
   ஆனந்தமான ஞானபலம் கொண்ட பேருலகம்
   சடுதி இனிதே அமைத்து
   சற்குருவாக நீ நின்று
6. சகலருக்கும் ஞானம் அருளி இனிதே
   உலகமெங்கும் உன் ஞானப்படைகள்
   உருவெடுக்க கலியில் மாற்றம்
   உயர்வாக ஆறுமுகன் யான் நடத்தி அருள்புரிவேன்

7. அருளவே அரங்கன் உன் மார்க்கமே
அகிலத்தை வழி நடத்தக்கூடும்
அருள்பலமிக்க அரங்கன் உன் கொள்கையும்
ஆற்றல்மிக்க உன் தர்மமுமே

8. அணிகலனாய் உலகோர்க்கு துணைநின்று
அற்புதம்பட ஞான யுகமாற்றத்தையும்
ஞான சித்தர் காலத்தையும் ஞானிகளை வணங்கி
ஞான ஆட்சிபடைக்கும் வல்லமையும் தரக்கூடும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–